செ.வெ.எண்.15 நாள்: 05-09-2017

# தமிழ் வளர்ச்சித் துறை

## செய்திக்குறிப்பு

மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களுக்கிடையே தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் திருநெல்வேலியில் 15.09.2017 ஆம் நாள் நடைபெறுதல் தொடர்பாக.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

கல்லூரி மாணவ, மாணவியர்களுக்குத் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 15.09.2017 வெள்ளிக்கிழமை காலை 09.00 மணியளவில் திருநெல்வேலி காந்தி நகரில் உள்ள இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கல்லூரி மாணவர்களிடையே தமிழில் பேச்சாற்றலையும் படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திட மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையின் கீழ் அரசு ஆணையின்படி ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் முதல் பரிசுத்தொகையாக ரூ.10000/- , இரண்டாம் பரிசுத் தொகையாக ரூ.7000/- மூன்றாம் பரிசுத்தொகை ரூ.5000–மும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். போட்டிகள் பற்றிய விவரங்கள் சுற்றறிக்கை வாயிலாகக் கல்லூரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் சென்னையில் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கு பெறுவர்.

இப்போட்டிகளில் மாணவ, மாணவியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மண்டிலத் தமிழ் வளர்ச்சித்
துணை இயக்குநர்
திருநெல்வேலி

மாவட்ட ஆட்சியர்
திருநெல்வேலி

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.

## தமிழ் வளர்ச்சித் துறை

மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களிடையேயான தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வதற்கான படிவம்

மாவட்டம் – திருநெல்வேலி

1. மாணவரின் பெயர் (தமிழ், ஆங்கிலம்) :
2. தந்தையின் பெயர் :
3. பிறந்த நாள் / வயது :
4. பயிலும் கல்லூரி (தொலைபேசி எண்ணுடன்) :
5. பயிலும் பாடப்பிரிவு :
6. பயிலும் ஆண்டு :
7. இல்ல முகவரி / தொலைபேசி எண் :
8. கலந்து கொள்ளும் போட்டி (கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி) :
9. மாணவரின் மாதிரி ஒப்பம் : 1)

   2)

பரிந்துரை

இக்கல்லூரியில் பயிலும் செல்வன் / செல்வி - - - - - - - - - - தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பெறும் - - - - - - - - - போட்டியில் கலந்து கொள்ளப் பரிந்துரைக்கிறேன்.

முதல்வர் ஒப்பம்
அலுவலக முத்திரை

நாள்:-
போட்டி நடைபெறும் நாளன்று மாணவரின் ஒப்பம்

## தமிழ் வளர்ச்சித் துறை

**கல்லூரி மாணவர்களிடையே மாவட்ட அளவில் 15.09.2017 ஆம் நாள் நடைபெறவுள்ள தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கான விதிமுறைகள்.**

---

1. போட்டிகள் மாவட்டத் தலைமையிடத்தில் நடத்தப்படும். போட்டிகள் நடைபெறவுள்ள இடம், நாள், நேரம் ஆகிய விவரங்கள் மாணவர்களுக்குக் கல்லூரி முதல்வர் வாயிலாகத் தெரிவிக்கப்படும்.

2. மாவட்டத்திலுள்ள கலைக் கல்லூரிகள், பொறியியற் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பல்தொழில் நுட்பக் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள், பிற கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர் இப்போட்டிகளில் கலந்து கொள்ள தகுதியுடையவராவர்.

3. ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் மூன்று மாணவர்கள் மட்டுமே இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம். கலந்து கொள்ளும் மாணவர்களைக் கல்லூரியே தெரிவு செய்து அனுப்புதல் வேண்டும்.

4. போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் பற்றிய விவரங்களை இணைப்புப் படிவத்திலுள்ளவாறு மாணவரே அந்தந்தக் கல்லூரி முதல்வரிடம் அனுமதி பெற்றுப் போட்டி நடப்பதற்கு முன்னதாக மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்தில் அளிக்க வேண்டும்.

5. போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் போட்டிகள் நடைபெறும் நாளன்று காலை 09.00 மணிக்குள் வருகையினைப் பதிவுச் செய்திடல் வேண்டும்.

6. மூன்று போட்டிகளும் ஒரே நாளில் நடத்தப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும்.

7. ஒவ்வொரு போட்டியிலும் முதலாவதாக வெற்றி பெறும் மாணவருக்கு மாவட்ட அளவில் பரிசுத் தொகையாக ரூ.10000/-, இரண்டாம் பரிசுத்தொகையாக ரூ.7000/-, மூன்றாம் பரிசுத்தொகை ரூ.5000/-- மும் வழங்கப்படும். இதனுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

8. மாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்கள் 2017 ஆம் ஆண்டு மாநில அளவில் சென்னையில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறும். மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.15000/-, இரண்டாம் பரிசு ரூ.12000/-, மூன்றாம் பரிசு ரூ.10000/-, மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

9. சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு இரண்டாம் வகுப்பு இருப்பூர்திக் கட்டணம் அல்லது பேருந்துக் பயணக்கட்டணம் வழங்கப்படும்.

10. மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்குப் போக்குவரத்துப் பயணக் கட்டணம் வழங்கப்படமாட்டாது.